# SIGNIFICANCE OF DIALECT IN UPCOUNTRY TAMIL SHORT STORIES

R.N.Priyadharshani, Department of Linguistics,, University of Kelaniya
priyaravindran29@gmail.com

## Abstract

Language is an excellent medium of communication for the man to communicate his thoughts and feelings. Language has begun in the form of gestures and has eventually developed into a form of sound and speech where today it has become a symbol of a nation. Languages are commonly used in both spoken and written varieties. The earliest of these varieties is the spoken variety which helps to convey human emotions through speech. Spoken variety of a language can be classified into various dialects based on the social status, caste and region. Both spoken and written varieties of language are evident in literature. Since the emergence and development of Tamil prose literature, regional dialect has begun to gain significance in the literary world. The spoken variety of language has become an essential part of the literary world because it speaks of the lives of the common people. Spoken language gives the power to people to genuinely express their emotions when they encounter each social problem and the ways they have overcome them. At the same time, spoken variety has the potential power to highlight the peculiarities of a group of people who speak this language and distinguish their identity in society. On the above basis, the purpose of this article is to examine the influence of spoken variety of the language used in the upcountry Tamil short stories and underlying reasons for such an influence. This article is based on an analytical research methodology with special reference to six short stories from the collection of "Malaiyaga sirukadhaigal" as primary data. This article helps to understand the peculiarities of the spoken language of the upcountry Tamil people and to know the significance of the spoken variety in upcountry Tamil short stories.

**Keywords**: Spoken variety, Upcountry Tamil short stories, Emotional expression, Social identity, Uniqueness.

**அறிமுகம்**

மனிதகுலம் தோன்றிய காலம் தொடக்கம் சைகை, ஒலி, பேச்சு, எழுத்து என வளர்ச்சிப் பெற்றுவரும் மொழியானது சிறந்த ஒரு தொடர்பாடல் ஊடகமாக பரிணமித்துள்ளது. மனிதர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துக்கொள்ள, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்புடன் ஒற்றுமையாக வாழ கருத்துப் பரிமாற்றம் மற்றும் உணர்வுநிலை ரீதியான புரிதல் முதலியன அவசியமாகின்றன. அத்தேவையை நிவர்த்தி செய்துகொள்ள மனிதனால் பயன்படுத்தப்படும் கருவியாக மொழி விளங்குகிறது. அதுமட்டுமன்றி மொழியானது கலை இலக்கியங்களின் ஊடகமாகவும் தொழிற்படுகிறது. மொழிக்கும் இலக்கியத்திற்கும் இடையிலான உறவின் முக்கியத்துவத்தை சி.வன்னியகுலம் அவர்கள் தனது 'ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சுமொழி' என்ற நூலில் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலக்கியத்தின் மூலாதாரமாக விளங்குவது மொழியே. ஓவியம், சிற்பம், நடனம் போன்ற கலைகள் மொழியாற்றலின்றி இயங்கவல்லன. ஆயின் இலக்கியமோவெனின் மொழியை அடிப்படையாகக் கொண்டே இயங்கவல்லதாகிறது. எனவேதான் "இலக்கியம் பற்றிய விளக்கமென்பதெல்லாம் அடிப்படையில் மொழியியல்பேயாகும்." என்பர் ஸ்ரைநர்."

மொழியானது பேச்சு, எழுத்து ஆகிய இரு வழக்குகளைக் கொண்டுள்ளது. இவ்விரு வழக்குகளும் தொல்காப்பியர் காலத்திலிருந்தே பயன்பாட்டலிருந்து வந்துள்ளமையை தொல்காப்பிய பாயிரச் செய்யுள் வலியுறுத்தி நிற்கிறது.

"வட வேங்கடம் தென் குமரி
ஆயிடைத்

தமிழ்க் கூறும் நல் உலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி…"

'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' என்ற வரியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழக்கு என்ற பதமானது பேச்சுவழக்கையும், செய்யுள் என்ற பதமானது இலக்கியத்திற்குரிய எழுத்து வழக்கையும் குறித்து நிற்கின்றன. இவற்றுள் காலத்தால் முந்தியதாக கணிக்கப்படுவது பேச்சுவழக்கேயாகும். இப்பேச்சு வழக்கானது பிரதேசம், பண்பாடு, மதம், சூழ்நிலை முதலியவற்றின் அடிப்படையில் இடத்திற்கு இடம் வேறுபடும். இவ்வழக்கை கிளைமொழிகள், வட்டாரவழக்குகள் என்றும் அழைக்கலாம். உரைநடை இலக்கியங்களின் வளர்ச்சியினூடாக இலக்கிய உலகில் இன்றியமையாத ஓர் இடத்தைப் பெற்றுக்கொண்ட பேச்சுமொழிகள் பற்றிய பரவலான ஆய்வுகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் பேச்சுமொழியின் செல்வாக்கு எத்தகையது என்பதை மலையத் தமிழ்ச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் ஒரு சிறு முயற்சியாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

இவ்வாய்வுக்கட்டுரையின் முதல்நிலைத் தரவுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மலையகச் சிறுகதைகள் விளங்குகின்றன. மலையக சிறுகதை மற்றும் கிளைமொழி பற்றி எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தின் வழி பெற்றுக்கொண்ட தரவுகள் முதலியன இரண்டாம் நிலைத் தரவுகளாக கொள்ளப்படுகின்றன. சிறுகதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பேச்சுவழக்குப் பகுதிகளை எடுக்காட்டாகக் கொண்டு அவை உணர்வுநிலை வெளிப்பாட்டில் எழுத்துவழக்கை விட முக்கியத்துவம் பெற்றுள்ளமையையும் மலையகத்திற்கேயுரிய தனித்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றமையையும் விளக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இவ்வாய்வானது விவரண ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறது.

**பேச்சுமொழி**

பொதுவாக மொழி என்பதற்கு முடிந்த முடிவான ஒரு வரைவிலக்கணத்தை முன்வைக்க முடியாது. மொழியின் தொழிற்பாடுகளை விளக்கி அத்தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான கருவியாக மொழியை அடையாளப்படுத்தலாமே ஒழிய இதுதான் மொழி, மொழி என்பது இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படித்தான் கையாளப்பட வேண்டும் என்று விதிகளை வகுக்க முடியாது. ஒவ்வொரு மொழியும் தன்னை கையாள்பவரின் தன்மை, கையாப்படும் சூழ்நிலை என்பவற்றின் அடிப்படையில் தனக்கான வடிவத்தையும் பொருளையும் பெற்றுக்கொள்கின்றன. மொழியின் பாதுகாப்பு கருதி குறித்த மொழியின் எழுத்து வழக்கிற்கு இலக்கண ஆசிரியர்கள் பல விதிகளை குறிப்பிட்டிருந்தாலும் அவ்விதிகள் மீறப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. பேச்சுமொழியை பொருத்தமட்டில் மேற்குறிப்பிட்டது போல எல்லைப்படுத்தக்கூடிய எந்த விதிகளும் இல்லை. எனினும் பேச்சுமொழியின் இயல்புகள், பயன்படுத்தப்படும் நோக்கம் முதலியவற்றின் அடிப்படையில் பல அறிஞர்கள் பேச்சுமொழி பற்றியும் அதன் இயல்புகள் பற்றியம் பல விளக்கங்களை முன்வைத்துள்ளனர். அவற்றுள் ஓரிரு விளக்கங்களை உதாரணமாக நோக்குவோம்.

"ஓர் இடத்தார் அல்லது ஓர் இனத்தார் அல்லது ஒரு கூட்டத்தைச் சார்ந்தவர்கள் அல்லது ஒரு தொழிலைச் சார்ந்தவர்கள் தமக்குள் தடையின்றி விளங்குமாறு இயல்பாக பேசிவரும் மொழி கிளைமொழியாகும். எவ்வகையான வேறுபாடும் அம்மொழி பேசுவோர்க்குத் தெரியாதவாறு இயல்பாக அமைவது கிளைமொழி." (மு.வரதராசன்)

"ஒரு தனிமனிதனின் பேச்சுவழக்கைத் தனிவழக்கு என்று கூறுவர். இவ்வாறு தனி மனிதர்கள் சமுதாய மற்றும் வட்டார வரன்முறைகளுக்கு உட்பட்டு சிறுசிறு குழுவினராக இணைந்து வாழ்கின்றனர். இச்சிறு குழுவினர் பேசும் மொழிவழக்கு சில மொழியியற்கூறுகளைத் தமக்குரியனவாகப் பெற்றிருக்கின்றது. இத்தகைய பேச்சுவழக்குகளே கிளைமொழிகள் எனப்படுகின்றன………மக்கள் தாம் சார்ந்த சமுதாயத்தோடு தங்களை ஐக்கியப்படுத்திக்கொண்டு கருத்துப்பரிமாற்றத்தினை மேற்கொள்கின்றனர். இதனால் அச்சமூகத்திற்கெனச் சில

குறிப்பிட்ட பேச்சுவழக்கு முறைகள் ஏற்படுகின்றன. சமுதாயக்கூறுகளை சாதி, சமயம் போன்ற உட்பிரிவுகளை சமுதாயப்பிரிவினர் மீண்டும் தங்களை இனங்கண்டு ஒன்றுபட்டு வாழவதால் மொழியும் சாதி சமய வழக்குகளும் உரிய சில வேறுபாடுகளைப் பெற்று பல்வேறு கிளைமொழிகளாகக் கிளைத்துவிடுகின்றது. இக்கிளைப்புக்கள் வலுவாகவும் மிக நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தும் இருக்குமானால் தனியான மொழி வழக்குகளைத் தெளிவுடன் திகழும்.........மக்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அவர்களுக்குத் துணை நிற்பது, அதற்காகப் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாவது, கருத்துப் புலப்பாட்டிற்கு குறிப்பாக அதன் ஆற்றலைப் பெருக்குவதற்கு விதிகளை தளர்த்தியும், புதுமைகளைப் புகுத்தியும் பழையனவற்றைக் கழித்தும் மொழியமைப்பைத் தேவைக்கேற்ப அமைத்துக்கொள்வது எனும் இவையெல்லாம் கிளைமொழியின் சிறப்பியல்புகள் எனலாம்.'' (கி.கருணாகரன்)

இவ்விளக்கங்களின் அடிப்படையில் நோக்குகையில் குறித்த இனக்குழுவினரின் பேச்சுமொழியானது அம்மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளோடு நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளது என்பதையும் அவர்களின் பண்பாட்டோடு ஒன்றியது என்பதையும் அவ்வினக்குழுவினரின் தனித்துவங்களை பிரதிபலிக்கக்கூடியது என்பதையும் கால மாற்றங்களுக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் ஏற்ற வகையில் பயன்படுத்தக்கூடியது என்பதையும் சமூக நிலைகள் மற்றும் பிரதேச அடிப்படையில் பல வேறுபாடுகளை கொண்டிருக்கும் என்பதையும் குறித்த பேச்சுமொழியை பயன்படுத்தும் சமூகத்தினரின் அடையாளமாக அது திகழ்கின்றது என்பதையும் விளங்கிக்கொள்ள முடியும்.

**மலையகத் தமிழ்ச் சிறுகதைகள்**

காலனித்துவத்தின் வருகையைத் தொடர்ந்து கீழைத்தேய நாடுகளில் நடைமுறையிலிருந்த நிலவுடைமைச் சமுதாயமானது சிதைவுற்று தனிமனித தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முதலாளித்துவ சமுதாயம் தோன்றியது. இதனால் நிலமானிய சமூகத்தில் பின்பற்றப்பட்டு வந்த பல நடைமுறைகள் மாற்றத்திற்குள்ளாயின. இச்சமூக மாற்றங்களையும் இம்மாற்றங்களினால் சமூகத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் பதிவுசெய்து வெளிப்படுத்துவதற்கான பொருத்தமான ஊடகமாக மரபிலக்கியங்கள் இருக்கவில்லை. இச்சந்தர்ப்பத்திலேயே நவீன இலக்கிய வடிவங்கள் பல தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றுள் சிறப்பான ஒரு இலக்கிய வடிவமாக சிறுகதை விளங்குகிறது. ''குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனித மனம் படும் பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை.'' என்ற கா.சிவத்தம்பி அவர்களின் கூற்றானது சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தின் அடிப்படையை விளக்கி நிற்கிறது. அந்தவகையில் தமிழில் படைக்கப்பட்ட முதலாவது சிறுகதையாக விளங்குவது வ.வே.சு.ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' என்ற சிறுகதையாகும். இவரைத் தொடர்ந்து கல்கி, புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், ஜெயகாந்தன், ஜெயமோகன், சுந்தரராமசாமி, முதலிய பலரும் உருவ மற்றும் உள்ளடக்க அடிப்படையில் வெவ்வேறு விதமான படைப்புக்களை வழங்கி தமிழ்ச் சிறுகதையின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளனர்.

இவ்வாறு தோன்றி வளர்ந்த சிறுகதை இலக்கிய வடிவமானது 1930 களில் ஈழத்தில் அறிமுகமானது. இலங்கையர்கோன், சம்பந்தன், சி.வைத்தியலிங்கம் ஆகிய மூவரின் முயற்சியால் சிறுகதைக்கான ஆரம்ப முயற்சிகள் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து அ.செ முருகானந்தம், அ.ந.கந்தசாமி, வரதர், வ.அ.ராசரத்தினம் என பல படைப்பாளர்கள் தோன்றி ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு வழிசமைத்தனர். இச்சமயத்திலே தென்னிந்தியாவிலருந்து தொழிலின் நிமித்தம் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு பல்வேறுபட்ட வகையில் சுரண்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டு நாடற்றவர்களாக நின்று தம் உரிமைகளுக்காய் போராடிக் கொண்டிருந்த மலையகத் தமிழ்ச் சமுதாயத்திலும் சிறுகதை இலக்கியம் தோன்றியது. அந்தவயையில் 1971இல் வெளிவந்த 'கதைக்கனிகள்' என்ற தொகுப்பே மலையகத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து தோட்டக்காட்டினிலே, மலையகப் பரிசுக் கதைகள், ஒரு கூடைக் கொழுந்து, நாமிருக்கும் நாடே முதலிய பல சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இன்றும் பல படைப்பாளர் மலையக மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு பல படைப்புக்களை படைத்து வருகின்றனர்.

அதனடிப்படையில் மலையகச் சிறுகதைகளில் மலையக மக்களின் பேச்சுமொழி பெறும் முக்கியத்துவத்தினை பற்றி நோக்கும் முன் மலையகச் சமுதாயம் பற்றி சுருக்கமாக விளக்குதல் அவசியமாகின்றது. இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களில் செறிந்து வாழும் மலையகத் தமிழ் மக்கள் 19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் பெருந்தோட்ட பயிர்செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து அடிமைக்கூலிகளாக அழைத்துவரப்பட்டவர்கள். இவர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரையிலும் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை, பாலியல் ரீதியான சுரண்டல்கள், அடிப்படை வசதிகளின்மை, வந்தேறிய முடிகள் என்பதால் எதிர்கொள்ளும் உரிமை மறுப்புகள் என இவர்களின் பிரச்சினைகளின் பட்டியல் நீண்டுக்கொண்டே செல்கின்றது. இன்று இப்பிரச்சினைகளின் தாக்கம் சற்று தளர்ந்துள்ளதே தவிர பிரச்சினைகள் முழுமையாக தீரவில்லை என்றே சொல்லலாம். தொடர்ந்து 20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலிருந்தே இச்சமூகத்தில் இலக்கிய ஆக்க முயற்சிகள் ஆரம்பமாகின. கவிதை, சிறுகதை, நாவல் என ஒவ்வொரு இலக்கிய வடிவமாக தோன்றி வளர்ந்தது. இவ்விலக்கியங்கள் இம்மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளை உள்ளடக்கமாக் கொண்டு அவர்களின் மொழியாலே படைக்கப்பட்டன. குறிப்பாக மலையகச் சிறுகதையானது மலையகத் தமிழர்களின் ஆரம்பகால வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகள் முதல் இன்றைய நிலை வரையில் அனைத்தையும் பதிவுசெய்து வைத்துள்ள இலக்கிய வடிவமாகத் திகழ்கிறது. ஒரு கூடைக் கொழுந்து, கவ்வாத்து, வெட்டுமரங்கள், பிரசவக்காசு, நாமிருக்கும் நாடே முதலிய பல சிறுகதைகளினூடாக மலையக மக்களின் வாழ்க்கை நிலைமைகள் வெளியுலகிற்கு திரைவிலக்கிக் காட்டப்பட்டன.

அந்தவகையில் மலையக மக்களின் வரலாற்றை அறிய உதவும் வரலாற்று ஆவணங்களாகவும் அவர்களின் பிரச்சினைகளை தத்ரூபமாக பதிவுசெய்து வெளியுலகிற்கு காண்பித்த சிறந்த ஊடகங்களாகவும் ஈழத்து இலக்கிய உலகில் மலையகதிற்கென தனியிடத்தை பெற்றுத்தந்த சிறந்த படைப்புக்களாகவும் மலையகச் சிறுகதைகள் விளங்குகின்றன.

**மலையத் தமிழ்ச் சிறுகதைகளில் பேச்சுமொழி.**

‘பேச்சு வழக்கின்றி புனைகதைகள் இல்லை’ என்று சொல்லும் அளவிற்கு புனைகதையாக்கத்தில் பேச்சுமொழி செல்வாக்கு பெற்றுள்ளது. இதற்கு முக்கிய காரணம் புனைகதைகளின் கதைமாந்தர்களும் வாசகர்களும் சாதாரண பொதுமக்களளாக இருக்கின்றமையே ஆகும். அதாவது மரபிலக்கியங்களைப் பொருத்தமட்டில் தன்னிகரில்லாத் தலைவர்களே பாட்டுடைத் தலைவர்களாக விளங்கினர். அவர்களின் வீர சாகசங்களும் காதல் உணர்வுகளுமே உள்ளடக்கங்களாகக் கொள்ளப்பட்டன. அதேசமயம் மரபிலக்கியங்கள் பல இலக்கண கட்டுப்பாடுளை கொண்ட செய்யுள் நடையில் படைக்கப்பட்டமையினால் கற்றறிந்த பெரும் புலவர்கள் மாத்திரமே அவற்றின் வாசகர்களாக இருந்தனர். ஆனால் புனைகதைகளோ அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்காக பல அவலங்களை எதிர்கொண்டு வாழும் சாதாரண மக்களின் வாழ்க்கையை உள்ளடக்கமாகக் கொண்டு படைக்கப்பட்டது. தம் வாழ்வில் பல இழப்புக்களை சந்தித்து இல்லாமைகளுக்குள் சிக்குண்டுத் தவிக்கும் சாதாரண மனிதர்களே கதைமாந்தர்களாகக் கொள்ளப்பட்டனர். இந்நிலையில் பொதுமக்களின் வாழ்வை தன்னிகரில்லா தலைவர்களின் வாழ்வை புகழும் பாணியில் சொல்லுதல் அத்துனை பொருத்தமானதாக இருக்காது. இச்சந்தர்ப்பத்தில் தான் இலக்கிய உலகில் பேச்சுமொழியின் இன்றியமையாமை உணரப்பட்டது. கதாபாத்திரங்களை இயல்பாக காட்சிப்படுத்தக் கூடிய ஆற்றல் பேச்சுமொழிக்கேயுண்டு என்ற விடயம் புரிந்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக இலக்கியங்களில் பேச்சுமொழி தனிச்சிறப்பிடத்தைப் பெற்றது. அதேசமயம் பேச்சுமொழியானது கற்றறிந்த அறிஞர்களை மாத்திரமன்றி சாதாரணமாக எழுத வாசிக்கத் தெரிந்தலர்களையும் படைப்பாளர்களாகவும் வாசகர்களாகவும் மாற்றியது. இவ்வாறான பல சிறப்புக்களால் பேச்சுமொழி இலக்கியங்களில் அதிக செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

அந்தவகையில் மலையகச் சிறுகதைகளிலும் இப்பேச்சுமொழி தனக்காதொரு தனியிடத்தை தக்கலைத்துக் கொண்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. பொதுவாக மலையகத் தமிழ் மக்களின் பூர்வீகம்

தென்னிந்தியா என்பதால் இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களின் பேச்சுவழக்கிற்கும் மலையகத் தமிழர் என அடையாளப்படுத்தப்படும் இவர்களின் பேச்சுவழக்கிற்கும் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. இம்மக்களின் பேச்சுவழக்கானது இவர்களின் பூர்வீகம், வாழ்விடம், தொழில், பழக்கவழக்கங்கள் முதலியவற்றின் அடிப்படையில் தனக்கேயுரிய தனித்துவத்தினைக் கொண்டு விளங்குகிறது. மலையகப் பிரதேசக் கிளைமொழியானது எத்தகைய தனித்துவங்களைக் கொண்டுள்ளது என்பதையும் சிறுகதைகளில் இக்கிளைமொழி அதிக செல்வாக்குப் பெறுவற்கான காரணங்கள் யாவை என்பதையும் எடுத்துக்காட்டுக்களோடு தொடர்ந்து நோக்கலாம்.

**சமூக அடையாளப்படுத்தலில் பேச்சு மொழியின் முக்கியத்துவம்**

ஒவ்வொரு இனக்குழுவினரும் சமூகத்தில் தமக்கான தனித்துவங்களை கொண்டுள்ளனர். அவர்கள் பேசும் மொழி, அவர்களின் கலாசாரம், அவர்களின் தொழில் முறைகள் முதலான பல விடயங்களில் இத்தனித்துவங்களை அவதானிக்க முடியும். ஒருவரின் பேச்சு, நடை உடை பாவனை முதலியவற்றை கொண்டு அவர் எந்த பிரதேசத்தை சேர்ந்தவர் அல்லது எந்த இனக்குழுவினர் என்பதை எம்மால் அறிய முடியும். இவ்விடத்தில் நடை உடை பாவனையை விட ஒருவரை சமூக ரீதியாக அடையாளப்படுத்தும் முக்கிய கருவியாக விளங்குவது அவ்வினக்குழுவினரின் பேச்சு மொழியே ஆகும். உதாரணமாக எமது நாட்டை எடுத்துக்கொண்டால் மலையகத் தமிழ் மக்களின் பேச்சு மொழிக்கும் வடக்குக் கிழக்குப் பிரதேசத் தமிழ் மக்களின் பேச்சு மொழிக்கும் கொழும்பு முதலான கரையோரப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களின் பேச்சு மொழிக்கும் அதிக வேறுபாடு உண்டு. அவர்களின் பேச்சு மொழியைக் கொண்டு அவர்களின் சமூகத்தை நம்மால் அடையாளம் காணமுடியும். இவ்வாறு சமூகத்தை அடையாளப்படுத்தும் ஆற்றல் பேச்சு மொழிக்கு அதிகம் உண்டு. தமிழர்கள் அனைவருக்கும் எழுத்துவழக்கு பொது என்பதால் பெரும்பாலும் எழுத்து வழக்கில் சமூக அடையாளப்படுத்தலை அவதானிப்பது மிக அரிது. மேற்குறிப்பிட்டது போல பேச்சு மொழியானது குறித்த ஒரு இனக்குழுவினரால் பயன்படுத்தப்படுகின்ற மொழி ஆகையால் அச்சமூகத்தின் பிரத்தியேகமான பல தனிச் சொற்கள் மற்றும் தனித்துவமான விடயங்கள் அந்த பேச்சு மொழியினூடாகவே வெளிப்படுத்தப்படும். இதற்கு சில மலையகச் சிறுகதை பகுதிகளை உதாரணமாக நோக்கலாம்.

“அந்தப் பிள்ளைமடுவத்தில் சுமார் பன்னிரெண்டு பிள்ளைகள். மனிதப்பிறவியின் அழகுப்பருவத்தைக் கேலி செய்துக் கொண்டிருந்தன…”

“…ஆமா எல்லாரும் பெரட்டு கலைஞ்சு இப்ப இவுக வந்திருக்காக பெரட்டு கலைக்க…”

“நோனாத் தோட்டத்தில நாலு லயத்த அடிச்சி நொறுக்கி கொள்ளையடிச்சிட்டானுகளாம். தோட்டத்து ஆளுகளெல்லாம் காட்டுக்கு ஓடி போயிட்டாங்களாம்….”

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உதாரணங்களில் இடம்பெற்றுள்ள பிள்ளைமடுவம், பெரட்டு, லயம் முதலிய சொற்கள் மலையகத்திற்கேயுரிய தனித்துவத்தினை பிரதிபலித்து அச்சமூகத்தை அடையாளப்படுத்தும் சொற்களாகும். இந்த சொற்கள் ஒவ்வொன்றும் மலையகத் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகள், தொழில் முதலியவற்றோடு நெருங்கிய தொடர்பை கொண்டவை. அதேசமயம் அவ்வினத்திற்கேயுரிய தனி அடையாளச் சொற்கள்.

இவற்றுள் பெரட்டு என்ற பதமானது பொதுவாக தோட்டத் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லும் முன்னர் ஒன்றுகூடும் இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சின்னதுரைமார், கங்காணிமார், தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் அதிகாலையிலேயே பெரட்டில் ஒன்று கூடுவர். குறித்த நாளில் யார்யாருக்கு என்ன வேலை என்பது இங்குதான் தீர்மானிக்கப்படும். அதேபோல புதிதாக வேலைக்கு வருபவர்களை பெயர் பதிந்துக்கொள்ளல், முதல் நாள் இடம்பெற்ற பிரச்சினைகள் தொடர்பாக விசாரித்தல் முதலிய செயற்பாடுகளும் பெரட்டில் இடம்பெறும். பிள்ளைமடுவம் என்பது தோட்டத்திற்கு வேலைக்கச் செல்லும் பெண்கள் தங்கள் குழந்தைகளை விட்டுச் செல்லும் இடமாகும். இங்கு வயது முதிர்ந்த அதாவது தோட்டத்தில் வேலை செய்ய முடியாத நிலையலிருக்கும் ஒரு பெண்மணி குழந்தைகளை பார்த்துக்கொள்வாள். இப்பிள்ளைமடுவமானது ஆங்கிலேயராட்சியின் போது பெண்கள் தங்கள் குழந்தைகளை காரணங்காட்டி வேலைக்கு வராமலிருக்கவோ அல்லது தாமதமாகி வேலைக்கு வர முயற்சிக்கவோ கூடாது என்ற திட்டத்தின் அடிப்படையில் செய்து கொடுக்கப்பட்ட வசதி. இன்றும் தோட்டப்புறங்களில் இப்பிள்ளைமடுவங்களைக் காணலாம். அடுத்ததாக உள்ள

லயம் என்ற பதமானது அனைவருக்கும் மிகப் பரிட்சயமான ஒன்று. இது தோட்டப்புற மக்களின் குடியிருப்பைக் குறிக்கின்றது. லயம் என்ற சொல்லைக் கேட்டாலே மலையகம் எம் கண் முன் தோன்றும். அந்தளவிற்கு இச்சொல் மலையகத்தோடு தொடர்புகொண்டுள்ளது.

மேலும் ஆயா, ஆத்தா முதலிய சொற்களும் பெரும்பாலும் மலையகத்தில் வழக்கிலிருக்கும் அடையாளச் சொற்களாக விளங்குகின்றன. அம்மா, மருகள், மகள் முதலிய நெருங்கிய சொந்தங்களை அல்லது அந்தளவிங்கு பாசமுள்ள பெண்களை அழைக்க இச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் பகுதிகளை இதற்கு உதாரணமாக நோக்கலாம்.

“….ஆமா ஆத்தா எனக்கும் என்னமாவது கஞ்சித் தண்ணி தா..”

“…இஞ்ச பாரு தம்பி ஒனக்கும் எனக்கும் பேச்சு இல்ல. எங்க ஒங்க ஆயா?..”

இவை மட்டுமன்றி கவ்வாத்து, இஸ்தோப்பு. மட்டக்கத்தி, வெட்டுக்கத்தி, சுருக்கா, பனிய, படங்குச்சாக்கு, கிட்டனுசு முதலிய பல பேச்சுமொழிச் சொற்கள் மலையகத் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் தனித்துவச் சொற்களாக விளங்குகின்றன. இத்தகைய சொற்கள் மலையகச் சிறுகதைகளில் பயன்படுத்தப்படுவதனூடாக மலையகத் தமிழினத்தின் அடையாளம் பல இடங்களிலும் அடையாளப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் மலையகச் சிறுகதைகளில் பேச்சுமொழியானது அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

**உணர்வுநிலை வெளிப்பாட்டில் பேச்சு மொழியின் முக்கியத்துவம்**

பொதுவாக இலக்கியம் என்பது படைப்பாளியின் அனுபவங்களை அல்லது உணர்வு நிலைகளை வெளிப்படுத்தும் ஊடகமாக விளங்குகிறது. இங்கு படைப்பாளி சமூகத்திலிருந்து தான் பெற்ற அனுபவத்தை அல்லது சமூக நிகழ்வுகளால் தன்னுள் உந்தப்பட்ட உணர்வு நிலையை மடை மாற்ற இலக்கியத்தை ஒரு கருவியாக பயன்படுத்துகிறான். எனவே உணர்வு வெளிப்பாடு என்பது இலக்கியத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது. எந்த ஒரு இலக்கியம் வாசகனுக்கும் படைப்பாளனுக்கும் மத்தியில் ஒரு சஹிர்தய நிலையைத் தோற்றுவிக்கிறதோ அதுவே சிறந்த படைப்பாக கருதப்படுகின்றது. அச்சஹிர்தய நிலை தோன்ற வேண்டுமாயின் வாசகன் படைப்பாளியால் வெளிப்படுத்தப்பட்டுள்ள உணர்வு நிலைகளை தன்னுணர்வாக உணர வேண்டும். வாசகன் படைப்பாளியின் உணர்வு நிலைகளை தன்னுணர்வாக உணரும் வகையில் படைப்பாளன் இலக்கியத்தை ஆக்க வேண்டும். அதாவது படைப்பாளன் ஒருவன் தன் படைப்பின் ஊடாக நகைச்சுவையான ஒரு விடயத்தை அல்லது நகைச்சுவையான ஒரு அனுபவத்தை வெளிப்படுத்துகிறான் எனின் அந்தப் படைப்பை நுகரும் வாசகன் அதனை நுகர்ந்த அக்கணமே புன்னகைக்க வேண்டும். அதேபோல படைப்பாளன் தன் படைப்பினூடாக உள்ளத்தில் குவிந்துகிடக்கும் துயரங்களை வெளிப்படுத்துகிறான் எனில் அவனுடைய படைப்பை நுகரும் வாசகன் அந்த துயரங்களில் மூழ்கி கண்ணீர் சிந்த வேண்டும்.

இவ்வாறு மெய்ப்பாட்டை தோற்றுவிக்கக் கூடிய வகையில் ஆக்கப்படும் இலக்கியங்களே சிறந்த இலக்கியங்களாகின்றன. அவ்வாறான ஒரு படைப்பை ஆக்குவதற்கு படைப்பாளன் மேற்கொள்ளவேண்டிய முக்கியமான நுட்பங்களுள் ஒன்று மொழியை பொருத்தமான முறையில் கையாளுதல் ஆகும். அதாவது ஒரு இலக்கியத்தில் வெளிப்படுத்தப்படும் உணர்வு நிலையை தத்ரூபமாக வெளிக்கொண்டு வரும் ஆற்றல் எவ்வழக்கிற்கு உண்டு என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப படைப்பாளன் மொழிநடையை கையாள வேண்டும். அந்தவகையில் நோக்கும்போது எழுத்து மொழியை விட பேச்சு மொழிக்கே உணர்வுநிலையை வெளிப்படுத்தும் ஆற்றல் அதிகம் என்பதை பின்வரும் சிறுகதை பகுதிகள் விளக்கி நிற்கின்றன.

“நம்ம தலவிதிய யார்கிட்ட போய் சொல்ல. நம்ம சனம் ஈந்தியாலில இருந்து வந்து காடு வெட்டி, றோட்டுப் போட்டு, தேயிலை, றப்பர் தோட்டம் உண்டாக்கி, ஆறோட ஆறு மணி நாயா ஒழைச்சி, அரவயித்துக் கஞ்சி குடிக்கிது. நம்மல போட்டு இப்படி அறியாயம் பன்னுறானுங்களே, அவனுகள ஒரு பாம்பு புடுங்காதா….!” எனவரும் பகுதியானது வயிற்றுப் பிழைப்பிற்காக நாடு விட்டு நாடு வந்து அதிகார வர்க்கத்தினரி தொடர்ச்சியான சுரண்டல்களுக்குள் சிக்குண்டு மீள வழி தெரியாமல் அவலங்களை சகித்துக் கொண்டு ஒவ்வொரு நொடியும் துடித்துக்கொண்டிருக்கும் மக்களின் மனவுணர்வினை அவர்களின் மொழியாலே மிகத் தத்ரூபமாக விளக்கி நிற்கிறது.

அதேபோல மலையகத்தை பொருத்தமட்டில் கவ்வாத்து வெட்டுதல் ஆண்களுக்கான பிரதான தொழில்களுள் ஒன்று. ஒரு குறித்த காலத்திற்கு பிறகு காய்ந்து போயிருக்கும் தேயிலைச் செடிகளின் கிளைகளை பக்குவமாக வெட்டிவிடுவர். கவ்வாத்து வெட்டப்படும் தேயிலைச் செடியானது நன்றாக முற்றி மிக உறுதியானதாக இருக்கும். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட பகுதி பிரித்துக்கொடுக்கப்படும். குறிப்பிட்ட நேரத்திற்குள் குறித்த பகுதியை அந்நபர் நிறைவு செய்ய வெண்டும். தன்னுடைய முழு சக்தியையும் கொண்டு கவ்வாத்து வெட்டும் தொழிலாளியின் உடலின் வருத்தத்தையும் அதனிலிருந்து மீள அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும் மிக உணர்வு பூர்வமாக விளக்குவதாக இப்பகுதி அமைகிறது.

"நேத்துக்கே ஓடம்பெல்லா புண்ணாப்போச்சு…இன்னக்கி எப்பிடியு கவ்வாத்து முடிஞ்சிற ஊட்டுக்குப் போயி கொஞ்சோ சுடுதண்ணி வச்சி குளிச்சிப்பிட்டு ரம்பண்டா கிட்ட போயி ஒரு அர டிராம் அடிச்சிட்டு வந்து சாப்பிட்டு ஒரு தூக்கம் போட்டு எழும்புனாக்கா நாளைக்கு மலைக்கு ஏறலாம்…ஓடம்பு ஒரு மாரி நல்லா இருக்கும்…." இதனை எழுத்துவழக்கில் சொல்லும் போது அவர்களின் வலிகளை வெறுமனே வாசிக்க மட்டுமே முடியும். ஆனால் பேச்சு வழக்கில் கூறும்போது அந்த வலியை வாசகர்களால் உணரவும் முடிகிறது.

"என்னா…இன்னு கொஞ்சோ நேரோம் போயிட்டு வாரதுதானே?...தொர அவுக இது ஒங்க அப்பே ஊட்டு தோட்டோ… ஒங்க ஆயிவூட்டு சட்டமுன்னு நெனைச்சிகிட்டு நிங்க நெனச்ச மூப்புக்கு ஆடுறிங்களா?... கங்காணி, இன்னைக்கு பழைய மல கவ்வாத்த முடிக்கனு… தொர பாக்க வாராகனு சொல்லியிருக்கிறாருங்கிறத்துக்காக இன்னைக்கு ஒனக்கு பாவோ பாத்து பேரு போடுறே… மத்த நாளா இருந்தா தெரியுமில்லே…" எனவரும் இப்பகுதி தொழிலாளி மீதான கங்காணியின் கோபத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடையானது கோபத்தால் கங்காணி பேசும் விதத்தை எவ்வித மாற்றமுமின்றி மிக இயல்பாக வெளிப்படுத்தி நிற்கிறது. இதனை எழுத்துவழக்கில் கூறியிருந்தால் இவ்வியல்பு நிலை மாற்றங்களுக்குள்ளாகி இருக்கும்.

பின்வரும் பகுதியானது தோட்டத்தில் நடக்கும் அநியாயங்களை கண்டு அதனை தட்டிக் கேட்க இயலாமல் சினங்கொள்ளும் ஒரு இளைஞனின் துடிப்பை வெளிப்படுத்தி நிற்கிறது. தங்களின் கடின உழைப்பு வீண்க்கப்படுவதையும் தாமே அதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்படுவதையும் எண்ணி உள்ளம் குமுறும் உணர்வுநிலை எவ்வித சிதைவும் தழும்பலுமின்றி பேச்சு மொழியினூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"ம்…என்னா நடக்குமா?... வேறென்ன ஒன்னையும் என்னையும் வெத்தல பாக்கு வச்சு அழைச்சுகிட்டு போயி நெலத்த எடுத்துக்கங்கடா பயலுகளான்னு சொல்லப்போறானுங்க….கேள்விய பாரு கேள்விய, என்னாத்த இனி நடக்க இருக்கு. நேத்து பத்தாம் நம்பர் மலையிலயும் தேயிலைய புடுங்கித் தள்ளிட்டானுங்க. புள்ள மாதிரி வளத்தது. எல்லாத் தேயிலையையும் எங்கள வச்சே புடுங்கிபுட்டு எல்லா முடிஞ்சோடனே எங்கள நைஸா மேப்பக்கமா போங்கடானு அனுப்பிப்புட்டு அவிங்களுக்குள்ள நெலத்த பங்கு போடடுக்குவானுங்க. வேறென்ன… தேவடியா மவனுங்க…"

"எம்மவ.. மீனாச்சிய தண்ணி ஒரு கொடம் புடிச்சிகிட்டு வாடின்னு அனுப்புனே. 'ஏ……! புள்ள இங்க லயத்து ஆளுகளோ…தண்ணிக்குப் பறவா பறக்குறாங்க….பீலியிலயும் தண்ணி சொட்டு சொட்டுன்னுதான் விழுகுது….! நீ வேற…. கொடத்தத் தூக்கிக்கிட்டு வந்திட்டியா? இன்னைக்கி மட்டும் புடிச்சிக்கிட்டுப் போ….! நாளையில இருந்து இந்தப்பக்கம் வந்துராத…! வந்த…..அப்புறம் நா பொல்லாதவன்னு சொல்ல வேணாம்' அப்படின்னு அதட்டி அனுப்பிப்புட்டானாம்….யாரோ கருமுஞ்சிப்பய கஞ்சனாமே அவன்…" என்ற 'தண்ணீர்' என்ற சிறுகதைப் பகுதியானது தண்ணீர் அள்ளச் சென்ற தன் மகளை திட்டி அனுப்பியவன் மீதான தாயின் கோப உணர்வை வெளிப்படுத்தி நிற்கிறது.

மேலும் கோபம், பரிதாபம், துக்கம் முதலிய உணரிவுநிலைகள் மட்டுமன்றி காதல் சார்ந்த உணர்வுநிலைகளும் மலையகச் சிறுகதைகளில் பேச்சுமொழியினூடாக மிக யதார்த்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தன்னை விட வயது கூடிய பெண்ணொருத்தியை ஒரு இளைஞன் ஒருதலையாக காதலிக்கிறான். அவளும் அதே எண்ணத்தோடுதான் தன்னுடன் பழகுகிறாள் என் அவன் நினைக்கிறான். ஆனால் அவள் இவனை தன் சகோதரனாக நினைக்கிறாள். இந்நிலையில் தன் அன்பிற்குரியவளை

வேறொருவன் பெண்பார்க்க வந்த செய்தியை கேட்டு அந்த இளைஞன் உள்ளம் குமுறும் நிலையை பின்வரும் ‘ரணம்’ என்ற சிறுகதைப் பகுதி வெளிப்படுத்தி நிற்கிறது.

“செங்குவோட தம்பிபய ஒளர்றானு நெனச்சி என்ன நானே அடக்கிக்கிட்டாலும், மனசுக்குள்ள அரிப்பா இருந்த சந்தேகம் இப்ப வலுத்துச்சு. என் மொகம் என்ன போக்கு போச்சோ தெரியல்ல. பழனி கெக்கெக்கேனு சத்தம் போட்டு சிரிச்சான். அந்தச் சிரிப்பு என்ன உசுரோட நெருப்பில வச்சு கொளுத்துறாப்புல இருந்துச்சு. இன்னம் கொஞ்ச நேரம் அவன்கிட்ட இருந்தா அழுதாலும் அழுதிடுவன் போல இருந்துச்சு. என்னால தாங்கவே முடியல. என்ன அநியாயம்! நா கடைசில ஒரு துரும்புக்கு சமமா போயிட்டேனே! இவ்வளவு நாள் எப்பிடி பாசமா பழகி இருப்பேன். எப்பிடி உசுரா இருந்திருப்பேன். அவ்வளவும் பொய்யா போச்சா???

அடச்சீ…..

அவளை கவாத்துக் கத்தியால கூறு கூறா வெட்டி கொல்லுவேனே தவற இன்னொருத்தன் கைல கொடுக்கிறதா??.......”

இவ்வாறான பல உணர்வுநிலைகள் தம் இயல்பை இழக்காமல் பேச்சு மொழியினூடாக மலையகச் சிறுகதைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவை வெறுமனே அவர்களின் உணர்வு நிலையை வெளிப்படுத்துவதோடு மட்டுமன்றி அதே உணர்வு நிலையயை வாசகரிடத்திலும் தோன்றச் செய்கின்றன. இத்தகைய உணர்வு மடைமாற்றத்தை மேற்கொள்ள எழுத்து வழக்கை விட பேச்சுமொழியே பொருத்தமான ஊடகமாக விளங்குகிறது. மலையகச் சிறுகதைகளில் பேச்சுமொழி அதிக செல்வாக்குப் பெற இதுவும் ஒரு முக்கியமான காரணமாகும்.

**பண்பாடு சார் விடயங்களை வெளிப்படுத்துவதில் பேச்சு மொழியின் முக்கியத்துவம்.**

பண்பாடு என்பது குறித்த ஒரு இனக்குழுமத்தினரின் வாழ்க்கை முறைமைகளையே குறிக்கின்றது. இந்தப் பண்பாடு என்ற பதத்திற்குள் குறித்த இனக்குழுவினரின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன் முறைகள், சடங்கு சம்பிரதாயங்கள், கலை இலக்கிய பாரம்பரியங்கள், உணவு முறைகள் முதலிய பல்வேறுபட்ட கூறுகள் உள்ளடங்குகின்றன. உணவு முறைகளிலும் சடங்கு சம்பிரதாயங்களை மேற்கொள்வதிலும் பண்டிகை விழாக்களை கொண்டாடுவதிலும் நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களிலும் என மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கூறுகளிலும் ஒவ்வொரு இனக்குழுவினர் மத்தியிலும் பல்வேறுபட்ட வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்தந்த சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படும் இலக்கியங்களினூடாக குறித்த சமூக பண்பாட்டு அம்சங்களை எங்களால் இனங்கண்டு கொள்ள முடியும். “ஒரு பகுதியைச் சேர்ந்த மக்களிடையே வழங்கும் மொழி அப்பகுதியினரின் மரபையும் பண்பாட்டையும் அறிய பெரிதும் துணைபுரிவதாகும். மொழியும் பண்பாடும் பிரிக்க இயலாதவை மொழி பண்பாட்டின் பகுதியாகும்.” எனவரும் ச.அகஸ்தியலிங்கம் அவர்களின் கூற்றானது மொழிக்கும் பண்பாடிற்குமான நெருக்கமான தொடர்பை விளக்கி நிற்கிறது. அதனிலும் எழுத்துவழக்கை விட பேச்சுவழக்கில் குறித்த இனத்தாரின் பண்பாடுசார் விடயங்கள் வெளிப்படுத்தப்படும் போது அவை தனக்கேயுரிய தனித்துவத்துடன் மிக யதார்த்தமாக வெளிப்படுத்தப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அதனடிப்படையில் மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள கிளைமொழியினூடாக மலையகத் தமிழ் மக்களின் வாழ்வியல் முறைமைகளாக விளங்கும் பண்பாட்டு அம்சங்கள் பல தமக்கேயுரிய தனி பாணியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அம்மக்களின் அன்றாட செயற்பாடுகள், சடங்கு சம்பிரதாயங்கள், தொழில்முறைகள், பண்டிகைக் கொண்டாட்டங்கள், நம்பிக்கைகள், உணவுமுறைகள் என பல்வேறுபட்ட பண்பாடு சார்ந்த விடயங்களை மலையகச் சிறுகதைகளின் வழியே அறிந்துக் கொள்ள முடிகிறது..

அந்தவகையில் மலையக மக்கள் ஆரம்ப காலம் தொட்டே சோதிடம், மந்திர வழிபாடுகள் முதலியவற்றில் அதீத நம்பிக்கை கொண்டவர்களாக இருந்து வருகின்றமை இருள், மொய்க்காசு, அவலம் முதலிய பல சிறுகதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

“…தோட்டம் தோட்டமாக சோதிடக்காரர்களைத் தேடிக்கொண்டு மகளது ஜாதகத்தை நோட்டமிட்டுக் கொண்டிருப்பதிலேயேதான் அவனது முழு நேரமும் செலவாகிக்கொண்டிருந்தது…. ‘பாக்கியம் புஸ்பவதியாகிய

நேரம் பொல்லாதது! அவளுக்குச் செவ்வாய்த் தோஷம்! இந்த வருஷம் முடியும்வரை அவளுக்கு இப்படி பல கண்டங்கள் இருக்கும். அதைப்பத்திக் கவலை வேண்டாம்' என்று சோதிடர் சொல்லியிருக்கிறார்…"

"நா ஒரு சாமான் மறைச்சுவச்சு 'குறி' கேப்பேன். அது என்னங்கிறதை யாரு சொல்றாங்களோ அவங்க அக்கினிச்சட்டி எடுக்கலாம். என்ன சரிதானே?......"

"துவண்டு கிடக்கும் மகளைத் தூக்கியணைத்து கருப்பன் கொடுத்த விபூதியைப் பூசி வாய்க்குள்ளேயும் கொஞ்சம் போட்டு எண்ணெய்யை நெற்றியில் மூன்று முறைத் தேய்த்தான். 'ராத்திரிக்குள்ள புள்ளைக்கு காச்சல் பறந்து போவும்….தோட்டத்து மருந்துக்காரன்கிட்ட புள்ளைகு காச்சல் கீச்சல்னு காட்டிபுடாத. அவன் போயி டக்டருகிட்ட சொல்லிப்புடுவான். பொறகு டக்டர் பெரியாஸ்பத்திரிக்கு துண்டு குடுத்துட்டானா போச்சு!.....நாளைக்கு கருப்பன் வருவாரு. கொஞ்சம் சாமி சாமான் வாங்கி வைக்கனும்…" எனவரும் பகுதிகள் இதற்குச் சான்று பகர்கின்றன. டாக்டரை விட மந்திர பூசாரியை நம்பி வாழும் நிலை இன்றும் மலையகத்தின் சில பகுதிகளில் காணப்படுகிறது. இது அவர்களின் நம்பிக்கை.

அதேபோல பிறப்பு முதல் இறப்பு ஈறாகவுள்ள பல சடங்கு சம்பிரதாயங்களையும் மலையக தமிழர்கள் மேற்கொள்கின்றமையையும் தைபொங்கல், தீபாவளி முதலிய பண்டிகைகளைக் கொண்டாடுகின்றமையையும் மலையகச் சிறுகதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. உதாரணமாக இறப்புச் சடங்குகள் குறித்து வெளிப்படுத்தி நிற்கும் பின்வரும் பகுதியை நோக்கலாம். "ஆளுக்கொரு வேலைய பாருங்கப்பா…எங்கடா பாபரு…அவர கூப்பிட்டு கொஞ்சம் நெல்லு பொரிக்கச் சொல்லு…இந்தாபாரு ராசு நீ போய் தலைவர கூட்டக்கிட்டு வா. நேரமாச்சி….ராகுகாலம் வரமுந்தி வீட்டவிட்டு வெளிய எடுத்துரனும்….நீர் மால எடுக்க ரெடியா இருக்காங்க… எங்கப்பா தப்புகாரன கானா?..தோட்டத்து ஆளுங்க கோடி கொண்டாறாங்களாம்…தப்பு கேட்டாரு தலைவரையா அதாங்க பேசிக்கிட்டு நின்னே…"

" 'அம்மா'….பிள்ளை விழித்துக் கொண்டுதான் கிடந்தது. 'அப்பா இன்னிக்கு பொங்கலுன்னு அம்மா சொல்லிச்சு..நேத்துதான் பட்டாசு வாங்கியாறேன்னு என்ன ஏமாத்திட்ட. அன்னிக்காச்சும் வாங்கிட்டு வருவியா?..." இவ்வாறு மலையகத் தமிழர்களின் பண்பாட்டம்சங்கள் பலவற்றை அவர்களின் மொழியாலே வெளிபடத்த கிளைமொழி பெரிதும் துணைசெய்கிறது. எனவே குறித்த இனத்தவர்களின் பண்பாடு சார் விடயங்களை உயிர்த்துடிப்புடன் வெளிப்படுத்தும் ஊடகம் என்ற வகையிலும் பேச்சுமொழி மலையகச் சிறுகதைகளில் அதிக முக்கியத்துவத்தை தன்வசப்படுத்திக் கொண்டுள்ளது.

**தொகுப்பு**

எனவே தொகுத்து நோக்கும் போது சிறந்த தொடர்பாடல் ஊடகமாகத் திகழும் மொழியின் இரு வழக்குகளுள் ஒன்றான பேச்சு வழக்கானது மன உணர்வுகளை தத்ரூபமாகவும் யதார்த்தமாகவும் வெளிப்படுத்த துணை செய்யும் ஊடகமாக விளங்குகிறது. உரைநடை இலக்கிய வடிவங்களின் வளர்ச்சியோடு இலக்கிய உலகில் இன்றியமையா இடத்தைப் பெற்றுக்கொண்ட பேச்சு மொழியானது குறித்த மொழி பேசும் மக்களின் சமூக அடையாளமாத் திகழ்வதோடு அவர்களின் பண்பாடு சார்ந்த விடயங்களை உயிரோட்டத்துடன் வெளிப்படுத்தவும் துணை செய்கிறது. அந்தவகையில் இலங்கையின் மத்திய மலையகப் பிரதேசங்களில் செறிந்து வாழும் இந்திய வம்சாவழியின சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படும் மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் கையாளப்படும் பேச்சு மொழியானது அம்மக்களின் வாழ்வியற் பிரச்சினைகளையும் சமூக நிகழ்வுகளால் உந்தப்படும் அவர்களின் உணர்ச்சிக் கொதிநிலைகளையும் எவ்வித செம்மைப்படுத்தலும் இன்றி உள்ளதை உள்ளவாறே உயிரோட்டத்துடன் வெளிப்படுத்தும் சிறந்த ஊடகமாகச் செயற்படுகிறது. அத்தோடு அம்மக்களின் சமூக ரீதியான அடையாளமாகவும் அவர்களின் பண்பாடு சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தக்கூடிய கருவியாகவும் விளங்குகிறது. இதற்கான பல சான்றுகள் இவ்வாய்வுக் கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இத்தகைய காரணங்களினால் பேச்சு மொழியானது மலையகச் சிறுகதைகளில் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


1. மலையகச் சிறுகதைகள், துரைவி வெளியீடு, 1997.
2. சிவத்தம்பி.கா., தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் புத்தகாலயம், 1980.
3. வன்னியகுலம்.சி., ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சுவழக்கு, முத்தமிழ் வெளியீட்டு கழகம், 1986.
4. கருணாகரன்.கி., மொழியியல், கவிதா பதிப்பகம், 1997.
5. கிளைமொழிகள்., https://ta.m.wikipedia.org>wiki.
6. தமிழ் வட்டார மொழி வழக்குகள், https://www.wikiwand.com
7. வட்டாரக் கிளைமொழிகள், https://ta.m.wikipedia.org.